Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ்
# மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, பிப்ரவரி 22, 2025 | இதழ் 315

## இந்திய கடற்படையின் முதல் பயிற்சிப் படை கப்பல்கள் வியட்நாம் சென்றடைந்தன

சென்னை, 22 பிப்ரவரி 2025: இந்தியா மற்றும் வியட்நாம் கடற்படை இடையே நட்பு ரீதியான பயிற்சியை மேம்படுத்தும் வகையில், இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் திர் மற்றும் இந்திய கடலோரக் காவல்படையின் வீரா கப்பல்கள் வியட்நாமின் கேம் ரான் கடல்பகுதிக்கு சென்றடைந்தன. இந்த கப்பல்களுக்கு வியட்நாம் கடற்படை மற்றும் வியட்நாமில் உள்ள இந்திய அதிகாரிகளால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பையும் கூட்டாண்மையையும் இந்தப் பயணம் மேலும் வலுப்படுத்தும். இரு கடற்படைகளுக்கும் இடையிலான நெருக்கமான கடல்சார் ஒத்துழைப்பு மற்றும் பயிற்சி பரிமாற்றத்தை இந்திய போர்க் கப்பல்களின் பயணம் வலுப்படுத்துகிறது. பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி என்ற தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதற்கும் பிராந்திய கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் இந்திய அரசின் முன்முயற்சியின் அடிப்படையில் இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வேவ்ஸ் விளம்பர வீடியோ சவால் போட்டி

சென்னை, 22 பிப்ரவரி 2025: உலக ஒலி, காட்சி, பொழுதுபோக்கு (வேவ்ஸ்) உச்சி மாநாடு-2025 குறித்த விளம்பர வீடியோக்களை உருவாக்கும் போட்டியில் பங்கேற்குமாறு படைப்பாளிகள் மற்றும் கதை சொல்லிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. "வாருங்கள், எங்களுடன் பயணம் செய்யுங்கள்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்ட இந்த சவால் போட்டியானது டி இயக்குநர், விளம்பரங்களை உருவாக்குபவர், ஒளிபரப்பாளர் உள்பட அனைத்து தரப்பு பங்கேற்பாளர்களும் தங்கள் திறமையை வெளிப்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பாக உள்ளது. இந்திய ஒளிபரப்பு மற்றும் டிஜிட்டல் அறக்கட்டளை, தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த விளம்பர வீடியோ சவால் போட்டி வரும் மே மாதம் ஒன்றாம் தேதி முதல் 4-ம் தேதிவரை மும்பையில் உள்ள ஜியோ நிறுவன மையங்களில் நடைபெறும்.

## இந்தியாவிற்கும் பூட்டானுக்கும் இடையே தனித்துவமான மற்றும் வரலாற்று ரீதியான உறவை வலுப்படுத்த நாங்கள் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளோம்: பிரதமர்

சென்னை, 22 பிப்ரவரி 2025: புதுதில்லியில் நடைபெற்ற தலைமைத்துவ மாநாட்டில் பூட்டான் பிரதமர் திரு ஷெரிங் டோப்கேயின் உரையைப் பாராட்டிய பிரதமர் திரு மோடி, இந்தியாவிற்கும், பூட்டானுக்கும் இடையிலான தனித்துவமான மற்றும் வரலாற்று பூர்வமான உறவை வலுப்படுத்த நாங்கள் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளோம் என்றார். சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் பதிவிட்டிருப்பதாவது; "எனது நண்பர் பிரதமர் ஷெரிங் டோப்கேயை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி. இந்த மாநாட்டில் அவர் ஆற்றிய உரையைப் பாராட்டுகிறேன். இந்தியாவிற்கும் பூட்டானுக்கும் இடையிலான தனித்துவமான மற்றும் வரலாற்று பூர்வமான உறவை வலுப்படுத்த நாங்கள் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளோம்.

## காசி-தமிழ்நாடு இடையே கலாச்சாரத்தை இணைக்கும் பாலமாக விளங்குகிறது காசி தமிழ் சங்கமம் : மத்திய அமைச்சர் ஜெ பி நட்டா



சென்னை, 22 பிப்ரவரி 2025: காசிக்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே கலாச்சாரத்தை இணைக்கும் பாலமாகவும், வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாட்டிற்கு எடுத்துக்காட்டாகவும் காசி தமிழ் சங்கமம் 3.0 வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

வாரணாசியில் நடைபெறும் காசி தமிழ் சங்கமம் 3.0 நிகழ்வில் பங்கேற்று பேசிய அவர், அகத்திய முனிவர் வாரணாசியில் பிறந்தவர் என்றும் இங்கிருந்து தான் அவர் தமிழகம் சென்றார் என்றும் தெரிவித்தார். இதன் அடிப்படையிலேயே இந்த ஆண்டு நடைபெறும் காசி தமிழ் சங்கமம் நிகழ்வின் மையப்பொருளாக அகத்திய முனிவரின் செயல்பாடுகள் உள்ளன என்று அவர் குறிப்பிட்டார். தமிழகத்தில் சித்த மருத்துவத்தை தோற்றுவித்த அகத்திய முனிவர், தமிழ் இலக்கணத்திற்கு அவரது பங்களிப்பு அளப்பரியது என்று திரு நட்டா கூறினார்.

தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு செங்கோல் கொண்டு வரப்பட்டது பற்றி குறிப்பிட்ட அவர், பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து அதிகார மாற்றம் செய்யப்பட்டதன் அடையாளமாக அப்போதைய பிரதமர், நேருவிடம் செங்கோல் ஒப்படைக்கப்பட்டதாகவும் அதற்கு முக்கியத்துவம் அளிக்காமல் அது அன்றைய பிரதமரின் ஆனந்த பவன் இல்லத்தில் வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

செங்கோலின் முக்கியத்துவத்தை உணர்ந்தும், தமிழக மக்களின்பால் உள்ள உயர்ந்த மதிப்பையும் கருத்தில் கொண்டு 75 ஆண்டுகளுக்குப்பின் தமிழகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட செங்கோலினை புதிய நாடாளுமன்றத்தின் மையப்பகுதியில் வைத்த பிரதமர் நரேந்திர மோடி, அதற்கு முக்கிய அங்கீகாரம் கிடைப்பதற்கு வழி வகுத்தார் என்று திரு நட்டா கூறினார்.

யூமிழகத்திலிருந்து காசிக்கு வர இயலாதவர்களுக்காக 15-ம் நூற்றாண்டில் வாழ்ந்த மன்னன் அதிவீரராம பாண்டியன் தென்காசியில் காசி விஸ்வநாதர் ஆலயம் நிறுவியதை அவர் சுட்டிக்காட்டினார்.

மகாகவி பாரதியார் சில ஆண்டுகள் காசியில் வாழ்ந்த போதுதான், முறுக்கு மீசை வைத்து முண்டாசு கட்ட தொடங்கினார் என்றும் அதற்கு பிறகு தான் ஆங்கிலேயர்களுக்கு எதிராக அவர் போர்க்கொடி உயர்த்தினார் என்றும் அவர் தெரிவித்தார்.

காசி தமிழ் சங்கமம் போன்ற நிகழ்வுகள் ஒரே பாரதம், உன்னத பாரதம் என்ற கோட்பாட்டிற்கு வலு சேர்ப்பதாக மத்திய அமைச்சர் திரு நட்டா தெரிவித்தார்.

## தேசிய உடல் கட்டமைப்பு இயக்க பரிசோதனை திட்டத்தின் முதல் கட்ட செயல்பாடுகள் ஐந்து கின்னஸ் உலக சாதனைகளுடன் நிறைவடைகிறது

சென்னை, 22 பிப்ரவரி 2025: நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் சுகாதார திட்டத்தின் மைல்கல்லாக தேசிய உடல் கட்டமைப்பு இயக்க பரிசோதனை திட்டம் முன் எப்போதும் இல்லாத வகையில் ஐந்து உலக சாதனைகளைப் படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. இது முழுமையான சுகாதாரப் பாதுகாப்புக்கான நாட்டின் அர்ப்பணிப்புமிக்க செயல்பாடுகளையும், இயற்கை மருத்துவத்தின் மீது அதிகரித்து வரும் உலகளாவிய அங்கீகாரத்தையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது. மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய மருத்துவ முறைகளுக்கான தேசிய ஆணையமானது தேசிய உடல் கட்டமைப்பு இயக்க பரிசோதனை திட்டத்தின் முதற்கட்ட நிறைவு விழாவை மும்பையில் 2025-ம் ஆண்டு பிப்ரவரி 20-ம் தேதி நடத்தியது.

ஐந்து அம்சங்களின் கீழ், இத்திட்டம் உலக சாதனைகளைப் படைத்துள்ளதாக கின்னஸ் உலக சாதனைக்கான மதிப்பீட்டாளர் திரு ரிச்சர்ட் வில்லியம்ஸ் டென்னிங் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். இதற்கான சான்றிதழை அவர் மத்திய ஆயுஷ் இணையமைச்சர் திரு பிரதாப்ராவ் ஜாதவிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பேசிய திரு பிரதாப்ராவ் ஜாதவ், ஆயுஷ் சுகாதார அமைப்புகளின் வளர்ச்சியை எடுத்துரைத்தார். ஆயுர்வேதம் உள்ளிட்ட இயற்கை மருத்துவ நடைமுறைகளை விரிவுபடுத்துவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார். இத்திட்டத்தின் வெற்றிக்கு பங்களித்த அனைவரையும் பாராட்டுவதாகவும் அவர் கூறினார்.

## தென்னாப்பிரிக்கா நாட்டின் தலைமையின் கீழ் முதலாவது ஜி20 வேலைவாய்ப்பு பணிக் குழுக் கூட்டத்தில் இந்தியா பங்கேற்பு

சென்னை, 22 பிப்ரவரி 2025: தென்னாப்பிரிக்கா நாட்டின் தலைமையின் கீழ், முதலாவது ஜி20 வேலைவாய்ப்பு பணிக்குழு கூட்டம் அந்நாட்டில் உள்ள போர்ட் எலிசபெத்தில் 2025 பிப்ரவரி 21-ம் தேதி நிறைவடைந்தது. வேலைவாய்ப்பு பணிக்குழுவின் முன்னுரிமைகளாக (1) உள்ளடக்கிய வளர்ச்சி & இளையோருக்கு அதிகாரமளித்தல் மற்றும் (2) சமூக பாதுகாப்பு & டிஜிட்டல்மயமாக்கல் ஆகியவை குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டன.

நான்கு நாட்கள் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜி20 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள், அழைப்பு விடுக்கப்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, ஜி-20 அமைப்பின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதித்தனர். இதில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை செயலாளர் திருமதி சுமிதா தவ்ரா தலைமையிலான இந்திய பிரதிநிதிகள் குழு பங்கேற்றது. இதில், இந்தியாவில் அதிகரித்து வரும் சமூகப் பாதுகாப்பு, பணியாளர்கள் எண்ணிக்கை தொடர்பான தரவுகளின் அடிப்படையில் விவாதம் நடைபெற்றது. தொழிலாளர் நலனுக்காக இந்தியாவில் பயன்படுத்தப்படும் தேசிய பணியாளர் சேவை மற்றும் இ-ஷ்ராம் எனப்படும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இணையதளச் செயல்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன.

## தேசிய கல்விக் கொள்கை, தாய்மொழி வழிக் கல்வியை ஊக்குவிக்கிறது: மத்திய அமைச்சர் எல் முருகன் பேட்டி




சென்னை, 22 பிப்ரவரி 2025: தேசிய கல்விக் கொள்கை, மாணவர்களுக்கு தொடக்கக் கல்வியை அவர்களின் தாய்மொழியில் பயிற்றுவிக்க ஊக்கப்படுத்துகிறது என்று மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். சென்னையில் நேற்று (21.01.2025) செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய கல்விக் கொள்கை நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வி கிடைப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு, பல வல்லுனர்கள் ஆய்வு செய்து அதன் பரிந்துரைகளின்படி நடைமுறைப் படுத்தப்படுகிறது என்றார்.

மத்திய அரசு மும்மொழிக் கொள்கையை ஆதரிக்கிறது என்றும், அது மாணவர்களின் உலகளாவிய அறிவை வளர்க்க உதவும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். மூன்றாவது மொழி எந்தவொரு இந்திய மொழியாகவும் இருக்கலாம் என்றும், மத்திய அரசு எந்தவொரு குறிப்பிட்ட மொழியையும் கட்டாயப் படுத்தவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புதிய கல்விக் கொள்கை, குறிப்பாக அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை, வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள, பட்டியலின, பிற்படுத்தப்பட்ட வகுப்பின மாணவர்களுக்கு தரமான கல்வியுடன் பிற ஆராய்ச்சிக்கான வாய்ப்புகளையும் வழங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

கல்வி, வருங்கால சமுதாயத்தின் தூண்களான இளைஞர்களின் வாழ்க்கைக்கு வளமான அடித்தளத்தை அமைக்கும் பணியை செய்கிறது, அதில் அரசியல் கூடாது என்றும் மத்திய அரசு அனைவருக்கும் தரமான கல்வி கிடைப்பதை உறுதிசெய்யும் வகையிலேயே தேசிய கல்விக் கொள்கையை வடிவமைத்துள்ளது என்றும் டாக்டர் எல் முருகன் கூறினார். பி.எம்.ஸ்ரீ பள்ளிகளில் உள்ள அடல் புத்தாக்க ஆய்வகங்கள் மாணவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணர உதவும் என்றும், இதற்கு சிக்கல் ஏற்படுவதால் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு கிடைக்கவேண்டிய ரூ. 5000 கோடி நிதி தடைப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

# டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் அதிநவீன சொகுசு வசதிகளுடன் ஆற்றல்மிக்க புதிய லேண்ட் க்ரூசர் 300 கார் முன் பதிவு துவக்கம்



திருச்சி 22, பிப்ரவரி 2025: டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின், புதிய லேண்ட் க்ரூசர் 300 காருக்கான முன் பதிவு துவங்கி உள்ளது. 70 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியமிக்க டொயோட்டா நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த லேண்ட் க்ரூசர் 300 கார், ஆடம்பர சொகுசு கார்களை விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற வகையில் அதிநவீன சொகுசு வசதிகளுடன் ஆற்றல்மிக்க தொழில்நுட்பத்தில், சாலையில் காண்போரை கவரும் விதமாக கம்பீரத் தோற்றத்துடன் ெ'ளிவந்துள்ளது. சூப்பிடமுடியாத நம்பகத்தன்மை மற்றும் சிறந்த செயல் திறனுக்காக உலக அளவில் பெயர் பெற்ற லேண்ட் க்ரூசர் 300, டொயோட்டா கார்களின் முதன்மையான எஸ்யூவி காராக உள்ளது. தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த, மேம்பட்ட பவர்டிரெய்ன், அதிநவீன பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் ஆடம்பரமான உட்புறங்களைக் கொண்டுள்ளது. இது வாடிக்கையாளர்கள் விரும்பும் ஆடம்பரம், வலிமை மற்றும் சாலையில் ஆதிக்கம் ஆகிய அனைத்தையும் ஒருங்கே கொண்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட ஆற்றல் திறன் - இது இசட்எக்ஸ் மற்றும் ஜிஆர்-எஸ் ஆகிய இரு மாடல்களில், இரட்டை-டர்போசார்ஜ் செய்யப்பட்ட வி6 எஞ்சின் மூலம் இயக்கப்படுகிறது, அதன் முந்தைய மாடல்களுடன் ஒப்பிடும்போது இது மேம்பட்ட செயல்திறன், அதிக முறுக்குவிசை வெளியீடு மற்றும் எரிபொருள் சிக்கனத்தை வழங்குகிறது. 10 ஸ்பீடு தானியங்கி டிரான்ஸ்மிஷன் உடன் இணைக்கப்பட்ட இந்த கார், தடையற்ற வேகம் மற்றும் சிறந்த எஞ்சின் ஆற்றலை கொண்டிருக்கிறது. இதன் காரணமாக இந்த காரை ஒவ்வொரு முறை ஓட்டும்போதும் புதுமையான அனுபவத்தை வழங்குகிறது. கடினமான நிலப்பரப்புகளிலும் எளிதாக செல்லும் வகையில் இந்த கார் வடிவமைக்கப் பட்டுள்ளது. இதன் ஏடபிள்யூடி ஒருங்கிணைந்த மேலாண்மை அமைப்பு, மாறும் சாலை நிலைமைகளுக்கு ஏற்ப நிகழ்நேரத்தில் செயல்பட்டு, சிறந்த நிலைத்தன்மை மற்றும் கட்டுப் பாட்டை உறுதி செய்கிறது. சாலைகள் அல்லாமல் மணல், சேறு, பனி அல்லது பாறை பகுதிகளில் செல்லும்போது இதில் உள்ள மல்டி-டெரெய்ன் செலக்ட் மற்றும் மல்டி-டெரெய்ன் மானிட்டர் ஆகியவை துல்லியமான கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டுதலை வழங்குகின்றன. கூடுதலாக, ஜிஆர்-எஸ் மாடலில் சாலைகள் அல்லாமல் கரடுமுரடான நிலப்பரப்பில் செல்வதற்கு ஏற்ற சஸ்பென்ஷன் பொருத்தப் பட்டுள்ளது. இதன் காரணமாக எந்த நிலப்பரப்பிலும் இந்த கார் சொகுசான பயணத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. முழுமையாக ஜப்பானில் தயாரிக்கப்பட்ட இந்த கார் இசட்எக்ஸ் மற்றும் ஜிஆர்-எஸ் ஆகிய இரு மாடல்களில் கிடைக்கிறது. இதில் ஆப்பிள் கார்ப்ளே, ஆண்ட்ராய்டு ஆட்டோ மற்றும் மேம்பட்ட மேப்பிங் வசதிகளுடன் கூடிய புதிய 31.24 செ.மீ. டச் இன்போடெயின்மென்ட் சிஸ்டம்; மெமரி உடன் கூடிய பவர்-அட்ஜஸ்டபிள் ஸ்டீயரிங், தனித்துவமான ஓட்டுனர் அனுபவத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. தடையற்ற வசதிக்காக, புஷ்-பட்டன் ஸ்டார்ட் உடன் கூடிய ஸ்மார்ட் என்ட்ரி சிஸ்டம்; தொலைதூர வாகன பரிசோதனை மற்றும் செயல்பாடுகளை கண்காணிக்கும் டொயோட்டா ஐ-கனெக்ட் டெலிமேடிக்ஸ் வசதியைக் கொண்டுள்ள இந்த கார் ஒயிட் பியர்ல் மற்றும் அட்டிடியூட் பிளாக் ஆகிய இரு வண்ணங்களில் வருகிறது.

எக்ஸ் ஷாரூம் விலையாக இசட்எக்ஸ் மாடல் ரூ.2 கோடியே 31 லட்சத்திற்கும், ஜிஆர்-எஸ் மாடல் ரூ.2 கோடியே 41 லட்சத்திற்கும் கிடைக்கிறது. இது குறித்து டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் பயன்படுத்தப்பட்ட கார்கள் விற்பனை மற்றும் சேவைப் பிரிவு துணைத் தலைவர் வரீந்தர் வாத்வா கூறுகையில், எங்களின் லேண்ட் க்ரூசர் 300 கார் வலிமை, அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் சாலை மற்றும் சாலை அல்லாத கரடுமுரடான பாதைகளிலும் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

டொயோட்டாவின் டினுன்ஜிஏ-எப் மையத்தில் வடிவமைக்கப்பட்ட இந்த மாடல், சக்திவாய்ந்த இரட்டை-டர்போ வி 6 எஞ்சின், அதிநவீன பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் அதிநவீன வசதிகளுடன் ஓட்டுனர்களுக்கு புதுமையானதொரு அனுபவத்தை வழங்கும். எங்களின் லேண்ட் க்ரூசர் 300 கார் எங்கள் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை நிச்சயம் பூர்த்தி செய்யும் என்று நாங்கள் நம்புகிறோம்,

அதன் கம்பீரமான வடிவமைப்பு, அதிநவீன வசதிகள் ஆகியவை பிரீமியம் எஸ்யூவி பிரிவில் தனியானதொரு இடத்தை பிடிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# சாம்சங் ஆர்&டி இன்ஸ்டிடியூட் இந்தியா, பெங்களூர் ஆனது சாம்சங் இன்னோவேஷன் கேம்பஸ்-ஐ கர்நாடகாவின் முதல் பெண்கள்-மட்டும் பொறியியல் கல்லூரியில் திறந்துள்ளது



சென்னை, 22 பிப்ரவரி 2025: சாம்சங் ஆர் & டி இன்ஸ்டிடியூட் இந்தியா, பெங்களூர் ஆனது (எஸ்ஆர்ஐ-பி) சாம்சங்கின் முக்கியத்துவமிக்க உலகளாவிய குடிமகன் திட்டமான சாம்சங் இன்னோவேஷன் கேம்பஸ்-ஐ (எஸ்ஐசி) கர்நாடகாவின் முதல் பெண்கள்-மட்டும் பொறியியல் கல்லூரியான கீதா சிஷு ஷிக்ஷனா

சங்கா (ஜிஎஸ்எஸ்எஸ்) பெண்கள் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி கழகம், மைசூரில் திறந்துள்ளது, இந்த முன்னெடுப்பானது ஸ்டெம்-இல் பாலின சமத்துவத்தை முன்னெடுத்து செல்வதிலும் தொழில்நுட்பத்தில் பெண் தலைவர்களின் ஒரு புதிய தொழில்முறையை பேணுவதிலும் சாம்சங்கின் தளரா அர்பணிப்பை கோடிட்டு காட்டுகிறது.

செப்டம்பர் 2022-இல் அறிமுகப் படுத்தப்பட்ட இந்த எஸ்ஐசி திட்டமானது செயற்கை நுண்ணறிவு/இயந்திர கற்றல், பிக் டேட்டா மற்றும் கோடிங் & புரோகிராமிங் உள்ளிட்ட முக்கிய தொழில்நுட்ப திறன்களில் முனைப்பு கொண்ட விரிவான கல்வி திட்டத்தை உள்ளடக்குவது மற்றும் குறிப்பாக சாம்சங்கின் உலகளாவிய ஆர்&டி நிபுணர்களால் இந்திய இளைஞர்களை தொழில்துறைக்கு தயாராக்குவதற்காக வடிவமைக்கப்பட்டது. இந்த முன்னெடுப்பில் அனுமதி பெற்ற மாணவர்கள் ஆஃப்லைன் ஊற்றும் ஆன்லைன் பயிற்சியை வகுப்பறை வசதியில் நிபுணர்களிடமிருந்து பெறுவார்கள் மற்றும் எஸ்ஆர்ஐ-பி மற்றும் ஜிஎஸ்எஸ்எஸ் இன்ஸ்டிடியூட்டை சேர்ந்த மென்டர்களின் வழிகாட்டலின் பேரில் ஆக்கப்புத்தாக்க பிராஜெக்டுகளில் பணியாற்றுவார்கள்.

“வாய்ப்புகள் உட்சேர்ப்பு தன்மையுடன் இருந்தால் ஆக்கப் புத்தாக்கம் ஆனது செழித்திருக்கும் என்று சாம்சங்கில் நம்புகிறோம். சாம்சங் இன்னோவேஷன் கேம்பஸ்-ஐ (எஸ்ஐசி) கர்நாடகாவின் முதல் பெண்கள்-மட்டும் பொறியியல் கல்லூரியில் திறந்துள்ளது குறித்து நாங்கள் மிகவும் உவகையடைகிறோம். இது

பிரகாசமான இளம் சிந்தனாவாதிகள் தங்கள் ஆராய்ச்சி, சோதனை மற்றும் தொழில்நுட்பத்தின் எல்லைகளை விரிவு செய்கின்ற ஒரு இடமாக விளங்கும். அரசின் #டிஜிட்டல் இந்தியா மற்றும் #மேக் இன் இந்தியா பிரச்சாரங் களுக்கு இணங்கும் வகையில் இருக்கின்ற இந்த கேம்பஸ் ஆனது நாட்டினுள் தொழில்நுட்ப முன்னேற்றத்தை மாணவர்கள் உந்துசெலுத்த அவர்களுக்கு அதிகாரம் வழங்குகிறது. அவர்கள் படைத்து, ஆக்கப்புத்தாக்கம் செய்து மற்றும் தொழில்நுட்பம் மூலம் உலகை உருமாற்றம் செய்து வரும் வகையில் எதிர்கால பெண் தலைவர்களை வார்ப்பு செய்ய நாங்கள் ஆவலாக இருக்கிறோம்,” என்று எஸ்ஆர்ஐ-பி இன் பெருநிறுவன துணைத்தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனரான மோகன் ராவ் கோலி விளக்கினார். சாம்சங் சவுத்வெஸ்ட் ஆசியா ஆனது தனது எஸ்ஐசி எல்லையை 2023-ம் ஆண்டில் 3,000 ஆக இருந்ததிலிருந்து 2024-ல் 3,500 மாணவர்களுக்கு அனுமதி சேர்க்கை வழங்கி விரிவுபடுத்தியது. எஸ்ஐசி மற்றும் சாம்சங் சால்வ் ஃபார் டுமாரோ (எஸ்எஃப்டி) போன்ற முன்னெடுப்புகள் மூலம் வெளிப்படும் சாம்சங்கின் பெருநிறுவன சமூக பொறுப்புபிற்காக அதன் தொடர் உறுதிப்பாடானது இந்தியாவின் எதிர்கால-தொழில்நுட்ப தலைவர்களை பேணி பயிற்சியளிக்கும் அதன் குறிக்கோளை கோடிட்டு காட்டுகிறது. இந்திய இளைஞர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்முனைவு வளர்ச்சியை முன்னெடுத்து செல்வது மட்டுமல்லாது இந்தியாவை ஒரு உலகளாவிய தொழில்நுட்ப நிலைமையமாக்குவதற்கு ஆற்றல் வழங்கும் வகையிலும் இத்தகைய திட்டங்கள் மூலம் சாம்சங் ஆனது இந்திய இளைஞர்களுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும்.

“எஸ்ஆர்ஐ-பி உடனான எங்கள் கூட்டுமுயற்சியானது அதிகபட்ச தாக்கத்தை உறுதிசெய்யும் மற்றும் தொழில்துறை-பிரத்தியேக பாடத்திட்டங்களையும் இந்த முக்கியமான ப்ராஜெக்ட்டுகள் மூலம் முக்கிய திறன்கள், வலுவான தொழில்நுட்ப அடித்தளங்கள் மற்றும் செய்முறை பயிற்சி ஆகியவற்றையும் வழங்கும். இந்த முன்னெடுப்பானது டிஜிட்டல் திறன்களிலுள்ள இடைவெளிகளை அடைத்தும் எதிர்கால ஊழியர்படைக்காக பெண்களை தயார்படுத்தியும் #டிஜிட்டல் இந்தியாவிற்கு ஆற்றல் வழங்கும் எங்கள் உறுதிபாட்டிற்கு வலுசேர்க்கிறது. நன்கு அமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் மூலம் மாணவர்கள், ப்ராப்ளம்-சால்விங் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் நடைமுறை அனுபவத்தை பெறுவதன் மூலம் அவர்கள் தங்கள் பணிநியமன தகுதி மற்றும் ஆக்கப் புத்தக்கம் ஆகியவற்றை வளர்த்து கொள்வார்கள். பெண் தொழில்நுட்பவியலாளர்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஊந்துசெலுத்த அவர்களுக்கு ஆற்றல் வழங்கும் இந்த மதிப்பிடமுடியாத கூட்டான்மைக்காக நாங்கள் எஸ்ஆர்ஐ-பிக்கு பாராட்டை தெரிவித்துக் கொள்கிறோம்,” என்று ஜிஎஸ்எஸ்எஸ் (ஆர்) மைசூருவின் காரியதரிசியான அனுபமா பி பண்டிட் விளக்கினார்.

எஸ்ஆர்ஐ-பி ஆனது கர்நாடகாவில் மேலும் ஏழு நிறுவனங்களில் எஸ்ஐசிக்களை நிறுவியுள்ளது. அவையாவன பிஎன்எம் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (மெயின் & நார்த் கேம்பஸ்கள்), டான் பாஸ்கோ இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, கேஎல்இ இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, ஆர்என்எஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (ஆர்என்எஸ்ஐடி) பெங்களூரு மற்றும் ஐஐஐடி-கர்னூலில் ஒன்று.

இவை 800 க்கும் அதிகமான மாணவர்களுக்கு பயிற்சியளித்து தேவையான திறன்களை வழங்குவதன் மூலம் தொழில்நுட்பத்தில் அவர்கள் உகந்த வாய்ப்புகளை பெற உதவும்.

# ஆதம்பாக்கம் பகுதியில் பழ வியாபாரியிடம் கத்தியைக் காட்டி மிரட்டி பணம் பறித்துச் சென்ற நபர் கைது.



சென்னை, 22 பிப்ரவரி 2025: சென்னை, கிண்டி, மடுவன்கரை, 11வது தெருவில் துரைசாமி, வ/42, த/பெ.பாவாடை என்பவர் வசித்து வருகிறார். இவர் கடந்த 19.02.2025 அன்று காலை ஆதம்பாக்கம், என்.ஜி.ஓ காலனி, பஸ்டிப்போ அருகே டிரை சைக்கிளில் பழவியாபாரம் செய்து கொண்டிருந்த போது, அங்கு வந்த 3 நபர்கள் மேற்படி துரைசாமியை வழிமறித்து அவதூறாக பேசி கத்தியைக்காட்டி மிரட்டி அவரிடமிருந்து ரூ.800/- பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். இது குறித்து துரைசாமி எஸ்-8 ஆதம்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். எஸ்-8 ஆதம்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட ஆகாஷ், வ/21, த/பெ. அஜ்மல்கான், ஈடுவன்கரை, கிண்டி, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட ஆகாஷ் மீது ஏற்கனவே 3 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. மேற்படி வழக்கில் சம்பந்தப் பட்டு தலைமறைவாக உள்ள மற்ற 2 குற்றவாளிகளை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர். விசாரணைக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட ஆகாஷ் 19.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## ரியல்மி நிறுவனம் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட ரியல்மி பி3 புரோ 5ஜி மற்றும் ரியல்மி பி3எக்ஸ் 5ஜி ஸ்மார்ட்போன்களை அறிமுகப்படுத்துகிறது: அதிநவீன அம்சங்களுடன் சிறந்த பெர்ஃபார்மென்ஸை வழங்கிடும் இவை முறையே ரூ .21,999 மற்றும் ரூ .12,999 விலையிலிருந்து




சென்னை, 22 பிப்ரவரி 2025: இந்திய இளைஞர்களிடையே மிகவும் பிரபலமான ஸ்மார்ட்போன் பிராண்டான ரியல்மி, இந்தியாவுக்காக பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட ரியல்மி பி3 சீரிஸ் 5ஜி ஐ பெருமையுடன் அறிமுகப்படுத்துகிறது. ரியல்மி பி3 புரோ 5ஜி மற்றும் ரியல்மி பி3எக்ஸ் 5ஜி ஆகிய ஸ்மார்ட் போன்களைக் கொண்ட இந்த சீரிஸ், இந்திய நுகர்வோருக்காக அதிநவீன கண்டுபிடிப்புகளை வழங்க வேண்டும் எனும் பிராண்டின் கொள்கையை பிரதிபலிக்கிறது. பெர்ஃபார்மென்ஸ், ஆயுள் மற்றும் ஸ்டைலில் முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம், இந்த ஸ்மார்ட் போன்கள் மிட்-ரேஞ் செக்மென்ட்டில் புதிய தராதரத்தை நிறுவவுள்ளது. இது அதன் பயனர்களுக்கு செக்மென்ட்-ஃபர்ஸ்ட் கண்டுபிடிப்புகளை வழங்குவதில் ரியல்மி கொண்டுள்ள உறுதிப்பாட்டுக்கு வலு சேர்க்கிறது.

ரியல்மி பி3 புரோ 5ஜி மற்றும் ரியல்மி பி3எக்ஸ் 5ஜி ஆகிய ஸ்மார்ட்போன்கள் பெர்ஃபார்மென்ஸில் புதிய சாதனையைப் படைப்பதோடு மட்டுமல்லாமல், மிகவும் போட்டி நிறைந்த சந்தையில் தனித்து நிற்கும் வகையில் வடிவமைப்பில் அற்புதமான அம்சங்களையும் அறிமுகப் படுத்துகின்றன. லீப்-ஃபார்வர்டு தொழில்நுட்பத்திற்கான ரியல்மியின் உறுதிப்பாட்டுக்கு இணங்க , இரண்டு ஸ்மார்ட்போன்களும் கைவினைத்திறன், அதிநவீன அம்சங்கள் மற்றும் நவீன, தொழில்நுட்ப ஆர்வலரான நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒப்பிடமுடியாத ஆயுள் ஆகிய அனைத்தையும் கொண்டுள்ளன.

இந்த அறிமுகம் குறித்து ரியல்மி செய்தித் தொடர்பாளர் கூறியதாவது, “புதுமை மற்றும் பயனரை மையமாகக் கொண்ட வடிவமைப்பிற்கான எங்கள் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கும் இந்த இரண்டு ஸ்மார்ட் போன்களான ரியல்மி பி3 புரோ 5ஜி மற்றும் ரியல்மி பி3எக்ஸ் 5ஜி ஆகியவற்றை அறிமுகப் படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சி யடைகிறோம். ரியல்மி பி3 புரோ 5ஜி, அதன் பிரகாசமான நிறத்தை மாற்றுகின்ற ஃபைபர் மற்றும் ஸ்னாப்டிராகன் 7எஸ் ஜென் 3 சிப்செட் மூலம், தனித்துவமான மற்றும் சக்திவாய்ந்த அனுபவத்தை வழங்குகிறது. ரியல்மி பி3எக்ஸ் 5ஜி, அதன் பெரிய பேட்டரி மற்றும் உயர்மட்ட வாட்டர் ப்ரூஃப் பெர்ஃபார்மென்ஸுடன் கடினமான நிலைமைகளைத் தாங்கும் வகையில் கட்டமைக்கப் பட்டுள்ளது.

இரண்டு ஸ்மார்ட்போன்களும் சிறந்த பெர்ஃபார் மென்ஸ், பிரமிக்க வைக்கும் விஷுவல் மற்றும் டியூரபிளிட்டியை வழங்கும் வகையில் தயாரிக்கப் பட்டுள்ளதால் எங்கள் பயனர்களுக்கு ஏற்ற சரியான தேர்வாக இருக்கிறது.

“ரியல்மி பி3 சீரிஸ் 5ஜி ஸ்மார்ட் போன்களை பிளிப்கார்ட்டில் விற்பனை செய்வதில் நாங்கள் மகிழ்ச்சி யடைகிறோம், இதன் மூலம் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சமீபத்திய கண்டுபிடிப்பு மற்றும் பெர்ஃபார் மென்ஸை வழங்குகிறோம். ரியல்மி மூலம், வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்பத்தின் எல்லைகளை நாங்கள் தொடர்ந்து விரிவுபடுத்தி வருகிறோம், ரியல்மி பி3 சீரிஸ் 5ஜி அதன் சக்திவாய்ந்த அம்சங்கள் மற்றும் புதுமையான வடிவமைப்புடன் தனித்து நிற்கிறது. இந்த ஸ்மார்ட்போன்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் பயனர்களுக்கு அதிநவீன ஸ்மார்ட் போன்களை குறைந்த விலையில் வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தி யுள்ளோம், மேலும் அவர்கள் எங்கள் தளத்தின் மூலம் சிறந்த தொழில் நுட்பத்தை பெறுவதை உறுதி செய்கிறோம்” என்று பிளிப்கார்ட் செய்தித் தொடர்பாளர் கூறினார்

## முறையற்ற குழப்பமின்றி, சிறந்த பேக்கிங்: காதலின் மாதத்தில் உங்கள் பேக்கிங் திறமையை மேம்படுத்துங்கள் அழகிய இனிப்புகளால் காதலை ஊட்டுங்கள், மேலும் உங்கள் சமையலறையை எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள் - ஏனெனில் பேக்கிங் என்பதுகாதலுக்காக, குழப்பத்திற்காக அல்ல!

சென்னை, 22 பிப்ரவரி 2025: பிப்ரவரி மாதம் என்பது உங்கள் அன்பை வெளிப்படுத்துவதற்கான சிறந்த நேரம். உங்கள் உயிரினம் ஒருவருக்காக ஏதாவது சுவையானதை சமைத்து அவரை மகிழ்விப்பதை விட இனிமையானது எது? ஆனால் வீட்டிலேயே பேக்கிங் செய்யும் மகிழ்ச்சி விரைவாக குழப்பமாக மாறிவிடலாம் - இடியப்பட்ட மாவு, கசியும் மாவுக் கலவை, சுத்தம் செய்ய முடியாத கிரீஸியுள்ள பேக்கிங் பாத்திரங்கள், மற்றும் அலம்ப வேண்டிய ஒரு பெரியக் குவியல் பாத்திரங்கள்! பேக்கிங் ஆனந்தத்தை அழிக்காமல் வைத்திருக்க, சமையலறை குழப்பங்களை சமாளிக்க சில எளிய துப்புரவு யுக்திகளை இங்கு பகிர்கிறோம்.

இந்த எளிய நுட்பங்களைப் பயன்படுத்தி, உங்கள் பேக்கிங் அனுபவத்தை முழுமையாக அனுபவிக்கலாம், மேலும் பிறகு வரும் சுத்தம் செய்யும் வேலைகளை கவலைப்படாமல் இருக்கலாம்.

1. வெற்றிக்கான அடிப்படை தயாரிப்பு - சாக்லேட் மற்றும் ஸ்பிரிங்கிள்ஸின் இனிமையான உலகில் முழுமையாக மூழ்குவதற்கு முன், உங்கள் சமையலறையை சரியாக அமைத்துக் கொள்ளுங்கள். தேவையான பொருட்கள் மற்றும் கருவிகளை ஒரே இடத்தில் வைத்து கொள்ளுங்கள், இதனால் நீங்கள் ஒட்டிய கைகளுடன் அங்குமிங்கும் தேட வேண்டிய அவசியமில்லை. சிறிய முன்னேற்பாடே உங்கள் வேலைகளை எளிதாக்கும்.

2. முன்னதாகவே பொருட்களை தயார் செய்யுங்கள் - பேக்கிங் செய்வதில் மைஸ் இன் பிளேஸ் (எல்லாம் சரியான இடத்தில்) என்பது முக்கியமானது. உலர் பொருட்களை அளந்து, கலந்து வைத்துக் கொள்ளுங்கள், முட்டைகளை அடித்து தயார் செய்யுங்கள், பால் மற்றும் தயிர் போன்றவை பயன்படுத்த தயாராக இருக்கட்டும். இதனால் கடைசி நேர அவசரம் குறையும், மேலும் பேக்கிங்கின் சுவாரசியமான பகுதிகளில் கவனம் செலுத்த முடியும். கூடுதலாக, முன்னேற்பாடு செய்யப்படாத பொருட்களை தேடுவதற்காக சமையலறையை குழப்பமாக மாற்றாமல் இருக்கலாம்.

3. சமையல் செய்யும்போதே சுத்தம் செய்யுங்கள் - உங்கள் சமையலறையை ஒழுங்காக வைத்திருக்க மிக முக்கியமான வழி, தொடர்ந்து சுத்தம் செய்வது. ஐதிசி நிம்ஈஸி டெக்னாலஜி கொண்ட டிஷ்வாஷ் ஜெல் பயன்படுத்துங்கள்; இது லிஃப்ட் ஆஃப் ஆக்ஷன் மூலம் உறைந்த அழுக்குகளை எளிதில் அகற்றும், மேலும் பாத்திரங்களை தேய்க்க வேண்டிய தேவையை குறைக்கும். சிம்ச் சார்ந்த இதன் ஆன்டி-மைக்ரோபியல் பண்பு உங்கள் சமையலறையை நறுமணமாகவும் சுத்தமாகவும் வைத்திருக்கும்.

4. புத்திசாலித்தனமான பேக்கிங் கருவிகளை பயன்படுத்துங்கள் - உயர்தர பேக்கிங் பாத்திரங்கள், சிலிகான் ஸ்பாடுலா, கசியாத அளவு கோல் கோப்பைகள் போன்றவற்றில் முதலீடு செய்யுங்கள். சிலிகான் பேக்கிங் மேட் ஒட்டாமல் இருக்கவும், பரவிய கலவைகளை அடக்கவும் உதவும், இதனால் சுத்தம் செய்வது மிக எளிதாக இருக்கும். நீங்கள் சமையலறையில் படிந்து இருக்கும் மீதியை குறைத்தால், பேக்கிங் முடிந்தவுடன் உங்கள் தயாரிப்பை சுவைப்பது எளிதாக இருக்கும்.

5. மனஅழுத்தமில்லாத, மகிழ்ச்சியான அணுகுமுறையை கடைபிடியுங்கள் - பேக்கிங் என்பது ஒரு மகிழ்ச்சியான செயலாக இருக்க வேண்டும், மன அழுத்தமில்லாததாக! தவறுகள் நேர்ந்தால் கவலைப்பட வேண்டாம், அவை ஒரு புதிய பாடமாகும். ஏதாவது சிதறினால், உடனே சுத்தம் செய்து விடுங்கள் (உங்கள் நீம் பேஸ்ட் டிஷ்வாஷ் ஜெல் உடன், உறுதியாக!) மற்றும் உங்கள் பேக்கிங் அனுபவத்தை தொடருங்கள். மகிழ்ச்சியான பேக்கர் ஆனந்தமான இனிப்புகளை உருவாக்குவார்!

6. ஆரோக்கியமான மற்றும் காரசாரமான விருப்பங்களை விரும்புபவர்களுக்கு - சிலர் இனிப்பு உணவை விரும்பமாட்டார்கள், அல்லது ஆரோக்கியமான விருப்பங்களை தேடுவார்கள். அவர்கள் ஸ்பினாச், செலரி, கேரட், பட்டாணி போன்ற சீசனல் காய்கறிகளுடன் ஒரு சூடான பாட் பை தயாரிக்கலாம். நீங்கள் உண்ணும் காய்கறிகளில் இருக்கும் பூச்சிக் கொல்லி மற்றும் கிருமிகளை நீக்க, ஐதிசி நிம்வாஷ் போன்ற இயற்கை சுத்திகரிப்பு திரவத்தை பயன்படுத்தலாம். இது 100% இயற்கையான செயல்முறையை வழங்கி, 99.9% கிருமிகளை நீக்க உதவுகிறது.

சாதாரண சமையலை ஒரு இனிமையான அனுபவமாக மாற்றுங்கள்! - இப்போது நீங்கள் கவலைப்பட வேண்டிய தேவையில்லை! உங்கள் சமையலறையை சுத்தமாக வைத்துக்கொண்டு, காதலின் மாதத்தில் பேக்கிங் செய்யுங்கள், சந்தோஷமாக உறவுகளை கொண்டாடுங்கள்!

## டிரெண்ட் ஆகும் ‘கெட் அவுட்‘ ஹேஷ்டேக்; சமூகவலைதளத்தில் தி.மு.க. - பா.ஜ.க. மோதல்

சென்னை 22, பிப்ரவரி 2025: மும்மொழிக் கொள்கை விவகாரத்தில் தி.மு.க., பா.ஜ.க.வினர் எக்ஸ் சமூகவலைதளத்தில் வார்த்தை (கெட் அவுட்) மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு சட்டசபைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் ஓராண்டுக்குமேல் உள்ள நிலையில் தமிழ்நாட்டில் தற்போதே அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. அந்த வகையில் மும்மொழிக்கொள்கையை தமிழ்நாடு அமல்படுத்தவில்லையென்றால் கல்விநிதி கிடையாது என மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திரபிரதான் கூறினார். இந்த விவகாரம் தமிழ்நாட்டில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் மும்மொழிக்கொள்கை விவகாரத்தில் தி.மு.க., பா.ஜ.க.வினர் எக்ஸ் சமூகவலைதளத்தில் வார்த்தை மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். இரு தரப்பினரும் 'கெட் அவுட்' என தொடங்கும் ஹேஷ்டேக்கை பயன்படுத்தி வருகின்றனர்.

எக்ஸ் வலைதளத்தில் 'கெட் அவுட் மோடி' என்ற ஹேஷ்டேக்கை பயன்படுத்தி பா.ஜ.க.வை தி.மு.க.வினர் விமர்சனம் செய்து வருகின்றனர். அதேவேளை, இதற்கு பதிலடியாக 'கெட் அவுட் ஸ்டாலின்' என்ற ஹேஷ்டேக்கை பயன்படுத்தி, தி.மு.க.வை பா.ஜ.க.வினர் விமர்சனம் செய்து வருகின்றனர். இந்த ஹேஷ்டேக்கள் தற்போது உலக அளவில் டிரெண்ட் ஆகி வருகின்றன.

இதனிடையே சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடந்த தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நிர்வாகிகள் ஒருமித்த குரலில் 'கெட் அவுட் மோடி' என்று கோஷங்கள் எழுப்பினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வல்லரசாக உயரும் இந்தியா: ஆன்மிக மாநாட்டில் மோடி பெருமிதம்

சென்னை 22, பிப்ரவரி 2025: இந்தியர் ஒவ்வொருவரும் நாட்டின் வளர்ச்சிக்காக இரவு பகலாக உழைக்கின்றனர். இந்தியா உலக வல்லரசாக மாறி வருகிறது என பிரதமர் மோடி தெரிவித்தார்.


புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில், ஆன்மிகம் தொடர்பான மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டில் பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கே சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:

இந்தியா உலக அளவில், ஒவ்வொரு துறையிலும் மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. முன்னேற்றத்தை இலக்காகக் கொண்ட எந்தவொரு நாட்டிற்கும் இயற்கை வளங்கள் மட்டுமல்ல, மனித வளங்களும் தேவை. நாம் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் துறையில் வளர்ச்சியை துரிதப்படுத்த வேண்டும். இன்று ஒவ்வொரு இந்தியரும் 21ம் நூற்றாண்டின் வளர்ந்த இந்தியாவுக்காக இரவும், பகலும் உழைக்கிறார்கள்.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

எனது மூத்த சகோதரர் பிரதமர் மோடியை ஒவ்வொரு முறை சந்திக்கும் போதும் மகிழ்ச்சி அளிக்கிறது. இன்னும் கடினமாக உழைக்க வேண்டும் என உத்வேகம் கிடைக்கிறது என்று பூடான் பிரதமர் ஷெரிங் பேசுகையில் குறிப்பிட்டார்.

## சர்வதேச தாய் மொழி நாள்; எம்மொழிக்கும் சளைத்ததல்ல எம் மொழி: ஸ்டாலின்



சென்னை 22, பிப்ரவரி 2025: சர்வதேச தாய் மொழி நாள் ஆண்டு தோறும் பிப்ரவரி 21ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் சர்வதேச தாய் மொழி நாள் இன்று கொண்டாடப்பட்டு வரும் நிலையில், எம்மொழிக்கும் சளைத்ததல்ல எம் மொழி என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், எம்மொழிக்கும் சளைத்ததல்ல எம் மொழி! இலக்கியங்களில் புதைந்திருந்த வரலாற்றினை மண்ணில் அகழாய்ந்து நிறுவி வருகிறோம்! அகத்திலும் புறத்திலும் அன்பும் வீரமும் கொண்டு வாழும் நற்றமிழர் தாய்மொழி, போற்றுதலுக்குரிய பழமை உடைய மொழி மட்டுமல்ல; பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்கும் ஆற்றல்கொண்ட செம்மொழி! உலகெங்கும் பரவட்டும் நம் உயர்தனிச் செம்மொழி! தமிழ் வாழ்க! இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

மும்மொழிக் கொள்கையை ஏற்க வேண்டும் என்று தமிழகத்துக்கு மத்திய அரசு மறைமுக அழுத்தம் கொடுத்து வரும் சூழலில், ”பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் கொண்ட செம்மொழி” என்று தமிழ் மொழி பற்றி முதல்வர் பெருமிதம் தெரிவித் திருப்பது குறிப்பிடத் தக்கது.

முன்னதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டிருந்தார். அதில், 'சூழும் பகைதனில் இருந்து தாய்மொழிகளை காப்போம். தமிழே அறம். தமிழே அரண்' என்று தெரிவித் திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தி.மு.கழக இளைஞர் அணி மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் தீர்மானங்கள்

சென்னை 22, பிப்ரவரி 2025: தீர்மானம் : 1 திராவிட மாடல் நாயகரை வணங்கி, வாழ்த்துகிறோம்! - மார்ச் 1 அன்று 72-வது பிறந்தநாள் காணும், இளைஞர் அணி மீது எப்போதும் தாயன்பு கொண்ட கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கழக இளைஞர் அணி சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்திய அளவில் உறுதியான கூட்டணி அமைத்து தொடர் வெற்றிகளைக் குவித்து வரும் தலைவர் அவர்கள், ஒன்றிய அரசின் பாரபட்சமான நிதிப்பகிர்வு, கூட்டாட்சித் தத்துவத்துக்கு விரோதமாகச் செயல்படும் ஆளுநர், அவதூறு பரப்பும் மக்கள் விரோத சக்திகள்... உள்ளிட்ட பல்வேறு இடையூறுகளைத் தாண்டி, மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி, நல்லாட்சி நடத்தி வருகிறார். அவர் இதே உற்சாகத்துடன் மக்கள் பணியை மென்மேலும் தொடர, இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் கூட்டம் தன் ’ாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. இளையோர் எழுச்சி நாளான கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவது, மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குவது, கல்வி உதவித் தொகை, மருத்துவ உதவி என மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டாடுமாறு இளைஞர் அணிச் செயல்வீரர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் : 2 - மதுரை ‘டங்ஸ்டன் சுரங்கம்’ அமைக்க ஒன்றிய அரசு எடுத்த முடிவைக் கைவிட வைத்த முதலமைச்சருக்கு பாராட்டு! ‘நான் முதலமைச்சராக இருக்கும்வரை, என்னை ணிறி டங்ஸ்டன் சுரங்கம் அமையாது’ என்று உறுதிபட தெரிவித்து, சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, மதுரை மாவட்டம், அரிட்டாப்பட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் ஒன்றிய அரசின் முடிவைக் கைவிட வைத்த கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, இக்கூட்டம் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

தீர்மானம் : 3 - ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு நன்றி! - மூன்றாவது முறையாக ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் வெற்றிபெற்று, தொடர் வெற்றிகளைக் குவித்து வரும் கழகத்தலைவர் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், திராவிட மாடல் ஆட்சி நல்லாட்சி என்பதற்கான நற்சான்றிதழாக, எதிரில் நின்ற அத்தனை வேட்பாளர்களும் கட்டுத்தொகை இழக்கும்படி, மாபெரும் வெற்றியைக் கழகத்துக்கு அளித்த ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் : 4 தமிழர் நாகரிகத் தொன்மையை வெளிக்கொணர்ந்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி! - 5 ஆயிரத்து 300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ‘இரும்பின் பயன்பாடு’, தமிழ்நாட்டில் தொடங்கிவிட்டது, சிந்துவெளிக்கும் முந்தைய தொன்மையான நாகரிகம் ‘தமிழர் நாகரிகம்’ என்ற அகழாய்வு முடிவுகளில் பெருமை கொள்கிறோம். தமிழர், திராவிடர் பெருமிதத்தை முறியடிக்க வேண்டும் என்பதற்காக, மேற்கொள்ளப்படும் அனைத்து சதிகளையும் வென்று, அகழாய்வுப் பணிகளை விரிவுபடுத்தி, வரலாற்றை மீட்டெடுக்கும் கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் : 5 - இளம் பேச்சாளர்கள் பயிற்சி முகாம் - துணை முதலமைச்சருக்கு நன்றி! முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, நம் இளைஞர் அணிக்கு கழகத்தலைவர் இட்ட கட்டளைகளில் ஒன்று ‘ஆற்றல்மிக்க நூறு இளம் பேச்சாளர்களைக் கழகத்துக்குத் தேர்ந்தெடுத்துத் தாருங்கள்’ என்பது. அதை நிறைவேற்றும் விதமாக ‘என் உயிரினும் மேலான’ என்ற பிரமாண்ட பேச்சுப் போட்டி நடத்தி 17,000 போட்டியாளர்களில் 182 இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்தோம். பல்வேறு தலைப்புகளில் பொருத்தமான ஆளுமைகளைக் கொண்டு பயிற்சி முகாமை சிறப்பாக நடத்தி, அவர்களைக் கருத்தியல் ரீதியாகத் தயார்படுத்தியிருக்கும் கழக இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் : 6 - நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டைப் புறக்கணித்த ஒன்றிய அரசுக்குக் கண்டனம்! தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்குவதில் தொடர்ந்து பாரபட்சம் காட்டுவதுடன், தொடர்ச்சியாகத் ‘தமிழ்நாடு’ என்ற பெயரே இல்லாமல் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தீர்மானம் : 7 - கல்வியைக் காவிமயமாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனம்! மாநில அரசின் உரிமைகளைப் பறிப்பதுடன் கல்வியைக் காவிமயமாக்கும் வகையில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தேடுதல் குழு உள்பட பலவற்றில் திருத்தங்களைக் கொண்டு வந்துள்ள பல்கலைக்கழக மானியக்குழுவையும் பின்னிருந்து இயக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தீர்மானம் : 8 - ஒன்றிய அரசின் சிறுபான்மையின விரோதப் போக்குக்குக் கண்டனம்! சிறுபான்மை இன மக்களின் உரிமைகளைப் பறிக்கும் வகையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவந்த ‘வக்பு வாரிய மசோதா’, எதிர்க்கட்சிகளின் பலத்த எதிர்ப்புக்குப் பிறகு நாடாளுமன்றக் கூட்டுக் குழுவுக்கு அனுப்பப் பட்டது. என்றாலும், எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த திருத்தங்களை முற்றிலுமாக நிராகரித்து, வக்பு வாரிய மசோதாவை சட்டமாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஜனநாயக விரோதப் போக்கை இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தீர்மானம் : 9 - மாநில உரிமை - கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிராகச் செயல்படும் ஆளுநருக்குக் கண்டனம்! தொடர்ச்சியாக மக்களின் எதிர்ப்புக்கும் நீதிமன்றக் கண்டனங்களுக்கும் ஆளானாலும், மக்கள் பிரதிநிதிகள் சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு, ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்துவது, மீண்டும் சட்டமன்றத்தில் மசோதாவை நிறைவேற்றி அனுப்பினால், அதைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி மேலும் தாமதப்படுத்துவது, பா.ஜ.க.வின் நிர்வாகி போல் பிற்போக்குக் கருத்துகளைப் பொது வெளியில் பேசித் திரிவது என்று அரசியல் சட்டத்துக்கும் கூட்டாட்சித் தத்துவத்துக்கும் எதிராகச் செயல்படும் ஆளுநரை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தீர்மானம் : 10 - தந்தை பெரியார் மீது அவதூறு பரப்பும் நாசகார சக்திகளுக்குக் கண்டனம்! மதவாத பா.ஜ.க. தமிழ்நாட்டில் காலூன்ற எவ்வளவோ முயற்சிகள் செய்தாலும், அதை முறியடிக்கும் தமிழ்நிலத்தின் தன்மானத் தடுப்புச்சுவராக விளங்குபவர் தந்தை பெரியார்.

நேரடியாகத் திராவிட இயக்கத்தை வீழ்த்த முடியாமல் கூலிகளை அமர்த்தி பெரியாரின் சிந்தனைகளையும் திராவிட இயக்கத்தையும் இழிவுபடுத்தி, எப்படியாவது தமிழ்நாட்டில் வேரூன்றப் பார்க்கிறது பா.ஜ.க. அந்த மதவாதச் சக்திகளின் கைக்கூலிகளாய், தந்தை பெரியார்மீது ஆதாரமற்ற அவதூறுகளை அள்ளிவீசும் நாசகார சக்திகளை வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழர்களின் சிந்தனைகளில் இருந்து பெரியாரை அகற்ற வேண்டும், திராவிடத்தை வீழ்த்த வேண்டும் என்று பல ஆண்டுகளாகப் பலர் முயன்றும் முடியாத காரியம், இப்போதும் எப்போதும் நிறைவேறப் போவதில்லை என்பதை இந்தக் கூட்டம் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது.

தீர்மானம் : 11 - கும்பமேளா கொலைகளுக்குக் காரணமான பா.ஜ.க. அரசுகளுக்குக் கண்டனம்! உத்தரப்பிரதேச மாநிலம், பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் கும்பமேளாவில், ஒன்றிய மற்றும் மாநில பா.ஜ.க. அரசுகளின் நிர்வாகச் சீர்கேடு மற்றும் அலட்சியத்தின் காரணமாக பலியான 30 பேர்களின் குடும்பத்தினருக்கும் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், ‘இந்துக்களின் பாதுகாவலர்’ என்று கூறிக்கொண்டு இத்தனை பேரின் மரணத்திற்கு எந்தப் பொறுப்பும் ஏற்காத ஒன்றிய மற்றும் மாநில பா.ஜ.க. அரசுகளுக்கு கடும் கண்டனத்தை இக்கூட்டம் தெரிவிக்கிறது.

தீர்மானம் : 12 தமிழ்நாடு முழுவதும் கண்டனப் பொதுக் கூட்டங்கள்! மும்மொழிக் கொள்கையைத் திணிக்கப் பார்க்கும், நிதிப்பகிர்வில் தமிழ்நாட்டுக்குப் பாரபட்சம் காட்டும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதி தோறும் இளைஞர் அணி சார்பில், கண்டனப் பொதுக் கூட்டங்கள் நடத்துவது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இந்தப் பொதுக் கூட்டங்களில் ‘என் உயிரினும் மேலான’ கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் பேச்சாளர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

முதல் மொழிப் போரை முன்னின்று நடத்திய தந்தை பெரியார், இருமொழிக் கொள்கையைக் காத்த பேரறிஞர் அண்ணா, ‘ஓடி வந்த இந்திப் பெண்ணே, நீ நாடி வந்த கோழை நாடு இதுவல்ல’ என்று 13 வயதில் தமிழ்க்கொடி ஏந்திய முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில், கழகத் தலைவர் தலைமையில், இளைஞர் அணிச் செயலாளர் வழிகாட்டுதலில், ஒன்றிய அரசின் இந்தி திணிப்பு முயற்சியை முறியடித்து, மொழியுரிமையை நிலைநாட்டுவோம் என்று இக்கூட்டம் உறுதியேற்கிறது.

# தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் எதிரொலி: 119 சீனா செயலிகளுக்கு மத்திய அரசு தடை

சென்னை, 22 பிப்ரவரி 2025: தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணங்களுக்காக 'கூகுள் பிளே ஸ்டோர்'ல் இருந்து, 119 செயலிகளை பதிவிறக்க மத்திய அரசு தடை விதித்துள்ளது. இதில், பெரும்பாலானவை சீனா மற்றும் ஹாங்காங்கில் இருந்து இயக்கப்பட்டவை எனக் கூறப்படுகிறது.

தேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகக் கூறி, 'டிக் - டாக், ஷேர் - இட்' உட்பட, 100க்கும் மேற்பட்ட செயலிகளை கடந்த 2020ல் மத்திய அரசு தடை செய்தது. இது தொடர்பான வீடியோ காட்சிகளின் பகிர்வுக்கும், அரட்டை பேச்சுக்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

அடுத்தடுத்த ஆண்டுகளிலும், சீன செயலிகளுக்கு எதிரான தடை தொடர்ந்தது. இந்நிலையில், 119 செயலிகளை கூகுள் பிளே ஸ்டோரில் இருந்து நீக்க மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த செயலிகளின் பட்டியலை அமெரிக்காவின் ஆர்வர்ட் பல்கலைக்கழகம் நடத்தும் கண்காணிப்பு தளமான லூமென் தரவு தளம் வெளியிட்டுள்ளது. இந்த தடை உத்தரவை கூகுள் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

தடை செய்யப்பட்ட செயலிகளில் பெரும்பாலானவை நம் அண்டை நாடான சீனா மற்றும் ஹாங்காங்கைச் சார்ந்தவை எனக் கூறப்படுகிறது. ஒரு சில செயலிகள் சிங்கப்பூர், அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளைச் சேர்ந்தவையாகும்.

தடை செய்யப்பட்ட செயலிகளின் முழு விபரங்கள் வெளியிடப்படவில்லை. தேசிய பாதுகாப்பு, இறையாண்மை மற்றும் ஒழுங்கற்ற செயல்பாடு காரணமாகவும், அரசுக்கு எதிரான உள்ளடக்கங்களை பயன்படுத்தியதாலும், இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

யூகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 69, ஏ, பிரிவின்படி, 119 செயலிகளும் முடக்கப்பட்டுள்ளன.

‘மங்கோஸ்டார்' குழுவால் உருவாக்கப்பட்ட சிங்கப்பூரை மையமாக கொண்ட, வீடியோ அரட்டை மற்றும் கேமிங் தளமான சில்சாட், ‘ப்ளோம்' நிறுவனத்தால் சீனாவால் உருவாக்கப்பட்ட ‘சாங்ஆப்’, ஆஸ்திரேலிய நிறுவனமான நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட, 'ஹனிகேம்' ஆகியவை, முடக்கப்பட்ட செயலிகளில் முக்கியமானவை ஆகும்.

# மொழி திணிப்பை இருமொழிக் கொள்கையால் வெல்வோம்: எடப்பாடி பழனிசாமி

சென்னை, 22 பிப்ரவரி 2025: அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் 'தமிழ் வெல்லும்' என்று அண்ணாதுரை கையெழுத்திட்டதை பகிர்ந்து வெளியிட்டுள்ள பதிவில், மொழி மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மையைப் பறைசாற்றும் உலகத் தாய்மொழி நாளான இன்று, நம் தாய்நிகர் தமிழ் மொழியைப் போற்றி வணங்குவதுடன், எல்லா மொழிகளுக்கும், எம்மொழி பேசும் மக்களின் உணர்வுகளுக்கும் சமத்துவப் போக்குடன் எப்போதும் மதிப்பளித்து, அதே சமயம் எம்மொழியை நம்மீது எவர் திணிக்கத் துணிந்தாலும் அதனை "உள்ளத்தில் தமிழ் உலகிற்கு ஆங்கிலம்" என்ற பகுத்தறிவு வாய்ந்த இருமொழிக் கொள்கையால் வெல்வோம் என உறுதியேற்போம்! என்று தெரிவித்து உள்ளார்.

# இலங்கைக் கடற்படை கைது செய்துள்ள அனைத்து மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை: மத்திய அமைச்சருக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்

சென்னை, 22 பிப்ரவரி 2025: ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 3 மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 10 மீனவர்களை 19 ந் தேதி அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப் பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட உடனடியாக தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண கூட்டு பணிக்குழுக் கூட்டத்தினைக் கூட்ட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சரின் 9.2.2025 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விரிவான பதிலுக்கு நன்றி தெரிவித்துள்ள முதலமைச்சர், 19 ந் தேதி அன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 மீனவர்கள், அவர்களது மீன்பிடிப் படகுகளுடன் இலங்கைக் கடற் படையினரால் கைது செய்யப் பட்டுள்ள சம்பவத்தினை ஒன்றிய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் கடந்த சில மாதங்களில் வேகமாக அதிகரித்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரம் நீண்ட காலம் பாதிக்கப் படுவதால், இத்தகைய கைது நடவடிக்கைகளைத் தடுத்திட உடனடி மற்றும் தொடர்ச்சியான தூதரக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். னுனவே, மீனவர்கள் கைது செய்யப் படுவதைத் தடுக்கவும், கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அதிகாரிகளிடமிருந்து விடுவிக்க ஏதுவாக, உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இந்த நீடித்த பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண தான் ஏற்கனவே வலியுறுத்தியபடி கூட்டுப் பணிக்குழுக் கூட்டத்தினைக் கூட்டுவதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஒன்றிய அமைச்சர் ஜெய்சங்கரை, முதலமைச்சர் ஸ்டாலின் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மருந்து ஆராய்ச்சி குறித்த 9-வது சர்வதேச கருத்தரங்கின் இரண்டாம் நாள்

சென்னை, 22 பிப்ரவரி 2025: லக்னோவில் உள்ள மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனத்தில், மருந்து கண்டுபிடிப்பு ஆராய்ச்சித் துறையின் தற்போதைய நிலைப்பாடு குறித்த 9-வது சர்வதேச கருத்தரங்கு நடைபெற்றது. இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் மருந்து ஆராய்ச்சி துறையில் புகழ் பெற்ற விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் தங்கள் கண்டு பிடிப்புகள் குறித்து எடுத்துரைத்தனர்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் புற்று நோய்க்கான சிமெரிக் ஆன்டிஜென் ஏற்பி- டி செல் சிகிச்சை முறை குறித்து மும்பை ஐஐடி நிறுவன பேராசிரியர் ராகுல் புர்வார் விளக்கம் அளித்தார். புற்றுநோய் உலகளாவிய பிரச்சினை என்றும், இந்த நோய்க்கு உயிரிழப் போர் எண்ணிக்கையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். சிமெரிக் ஆன்டிஜென் ஏற்பி- டி செல் சிகிச்சை முறை புற்று நோயை கட்டுப்படுத்துவதற்கான ஒரு அணுகுமுறை என்றும், விலை உயர்ந்த இந்த தொழில்நுட்பம் இந்தியாவில் கிடைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். அனைவருக்கும் இந்த சிகிச்சை கிடைக்கும் வகையில், கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் தற்போது நாடு முழுவதும் 300-க்கும் மேற்பட்ட புற்றுநோயாளிகள் இந்த டி-செல் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.